# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் I தரத்திலான உத்தியோகத்தர்களை மூப்புரிமை மற்றும் ஆற்றலுக்கு அமைய இலங்கை தொழில்நுட்ப சேவையில் விசேட தரத்துக்கு - "சிரேஷ்ட வளிமண்டலவியல் உத்தியோகத்தர்" பதவிக்கு தரம் உயர்த்துவதற்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்

1. வளிமண்டலவியல் திணைக்களத்தின் 2012, 2014, 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிலான இலங்கை தொழில்நுட்ப சேவையின் விசேட தரத்திலான வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு, கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பதவிகள் வெற்றிடமாக்கப்பட்டுள்ள திகதிகளுக்கு அமைவாக, இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள ஆகக்குறைந்த தகைமைகளைப் பூர்த்தி செய்யும், சேவையில் ஈடுபட்டுள்ள மற்றும் ஓய்வுபெற்றுள்ள (வளிமண்டலவியல் உத்தியோகத்தர்கள்/ அவதானிப்பாளர்/ தொடர்பாடல் உத்தியோகத்தர்கள்) உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| ஆண்டு | வெற்றிடம் ஏற்பட்டுள்ள திகதி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2012 | 2012.10.24 | 01 |
| 2014 | 2014.01.13 | 01 |
| | 2014.07.01 | 01 |
| | 2014.10.29 | 01 |
| 2015 | 2015.02.02 | 01 |
| | 2015.04.06 | 01 |
| | 2015.04.06 | 01 |
| | 2015.04.06 | 01 |
| | 2015.04.06 | 01 |
| 2016 | 2016.11.05 | 01 |
| 2017 | 2017.03.10 | 01 |

(இப்பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பதாரிகளின் தகைமைகள், குறிப்பிட்ட பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ள திகதியிலிருந்து கருத்தில் கொள்ளப்படும்.)

2. **விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைத்தல்**.- இந்த அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக தயார் செய்யப்படும் விண்ணப்பப்படிவங்கள், விண்ணப்பப்படிவங்கள் கோரப்படும் இறுதித் திகதியான 2020.11.20 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக "வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகம், 383, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07" எனும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது நேரடியாகக் கையளித்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வளிமண்டலவியல் திணைக்களம், இலங்கை தொழில்நுட்ப சேவையில் தரம் I உத்தியோகத்தர்களை மூப்புரிமை மற்றும் ஆற்றலுக்கு ஏற்ப இலங்கை தொழில்நுட்ப சேவையில் விசேட தரத்துக்கு தரம் உயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சை" என தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

3. **தகைமைகள்**.-

(அ) மேற்பார்வை முகாமைத்துவ உதவி தொழில்நுட்பவியலாளர் (MN-03) சேவைத் தொகுதியில் தரம் I இல் ஆகக்குறைந்த 06 வருடகால முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் உரிய திகதியில் 06 சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல்.

(ஆ) பதவியுயர்வுத் திகதிக்கு முந்திய கிட்டிய 05 வருட காலப் பகுதியில் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

(இ) அங்கீகரிக்கப்பட்டுள்ள செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கு ஏற்ப, பதவியுயர்த்தும் திகதிக்கு முன்னரான 06 வருட காலப்பகுதியில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதற்கு உயர்வான செயலாற்றுகையைக் கொண்டிருத்தல்.

(ஈ) மூன்றாவது வினைதிறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியெய்துதல்.

இந்த வெற்றிடங்கள் தற்போது தலைமை அலுவலகம் மற்றும் கட்டுநாயக்க விமான நிலைய வளிமண்டலவியல் அலுவலகத்தில் காணப்படுவதுடன், எதிர்காலத்தில் பிறிதொரு அலுவலகத்திலும் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

4. **ஆட்சேர்ப்பு நடைமுறை.-** மேற்குறிப்பிட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வெற்றிடங்கள் காணப்படும் திகதியில், 03 ஆவது பந்தியில் குறிப்பிடப்படும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை குழுவினால் நடாத்தப்படும் கட்டமைப்புரீதியான நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் ஆற்றல் ஒழுங்குவரிசையிலும் உரிய ஏனைய தேவைகளையும் பூர்த்தி செய்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னரும், பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படும்.

5. **பதவிக்கான சம்பள முறைமை.-**

(i) 2012, 2014 மற்றும் 2015 ஆண்டுகளில் - பொ. நி. சு. 06/2006 (IV) இற்கு ஏற்ப MN 7 2006 A - ரூபா 20,030.00 - 11 × 365 - 18×500 - ரூபா 33,045.00

(ii) 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் - பொ. நி. சு. 03/2016 இற்கு ஏற்ப MN 7 2016 - ரூபா 41,580.00 - 11 × 755 - 18 × 1,030 - ரூபா 68,425.00

6. சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் மூலம் நேர்முகப் பரீட்சையில் ஊர்ஜிதப்படுத்தப்படும் தகைமைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.

**7. இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் I தரத்திலான உத்தியோகத்தர்களை மூப்புரிமை மற்றும் ஆற்றலுக்கு அமைய இலங்கை தொழில்நுட்ப சேவையில் விசேட தரத்துக்கு தரம் உயர்த்துதல் ("சிரேஷ்ட வளிமண்டலவியல் உத்தியோகத்தர்")**

**புள்ளி வழங்கல் நடைமுறை**

1. **சேவைக்காலம்** **50 புள்ளிகள்**

இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் I இல் 06 வருட கால திருப்திகரமான சேவையினை பூர்த்தி செய்ததன் பிற்பாடு, அடுத்துவரும் ஒவ்வொரு வருடத்துக்கும் 2.5 புள்ளிகள் வீதம், ஆகக்கூடிய 50 புள்ளிகள்.

2. **ஆற்றல்** **50 புள்ளிகள்**

(1) **வாழ்க்கைத் தொழில் தகைமை** **20 புள்ளிகள்**

A. **தொழில் துறைரீதியாக பெற்றுக்கொண்டுள்ள**

(a) உலக வளிமண்டலவியல் அமைப்பின் வகுப்பு III இலான சான்றிதழ் 10 புள்ளிகள்

(b) உலக வளிமண்டலவியல் அமைப்பின் வகுப்பு IV இலான சான்றிதழ் 05 புள்ளிகள்

B. திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு பயிற்சிகள்

(a) சிறப்பாக பூர்த்தி செய்துள்ள, 30 நாட்களை அல்லது அதனை விஞ்சிய பாடநெறிக்கான சான்றிதழ் 05 புள்ளிகள்

(b) சிறப்பாக பூர்த்தி செய்துள்ள, 29-15 நாட்களைக் கொண்டுள்ள பாடநெறிக்கான சான்றிதழ் 03 புள்ளிகள்

(c) சிறப்பாக பூர்த்தி செய்துள்ள, 14 நாட்களுக்கு குறைந்த பாடநெறிக்கான சான்றிதழ் 01 புள்ளிகள்

(2) **தொழில்துறை சார்ந்த சேவைகள் தொடர்பில் பெற்றுக்கொண்டுள்ள பயிற்சி** **20 புள்ளிகள்**

(a) ரேடார் பயிற்சி 08 புள்ளிகள்

(b) ஜப்பான் சோன்ட் பயிற்சி 02 புள்ளிகள்

(c) திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தொடர்ச்சியான பயிற்சிப் பாடநெறிகள்- ஒரு பயிற்சிக்கு 02 புள்ளிகள் வீதம் 10 புள்ளிகள்

(3) **மொழித் தேர்ச்சி** **05 புள்ளிகள்**

*சர்வதேச மொழி*

(a) க. பொ. த. (உயர் தரம்) ஆங்கில மொழியில் பயின்று சித்தியெய்தியிருத்தல் அல்லது பல்கலைக்கழக பட்டத்தை ஆங்கில மொழியில் பூர்த்தி செய்திருத்தல் 05 புள்ளிகள்

(b) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில்/ நிறுவகமொன்றில் பயின்ற 06 மாத காலத்துக்கு குறையாத ஆங்கில டிப்ளோமா சான்றிதழ் பாடநெறி 05 புள்ளிகள்

(c) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில்/ நிறுவனமொன்றில் பயின்ற 06 மாத காலத்துக்கு குறையாத ஆங்கில சான்றிதழ் பாடநெறி 05 புள்ளிகள்

(d) க. பொ. த. (உ/த) பரீட்சையில் ஆங்கில மொழியை ஒரு பாடமாக கற்று சித்தியெய்தியிருத்தல் 04 புள்ளிகள்

(e) க. பொ. த. (சா/த) பரீட்சையில் ஆங்கில பாடத்துக்கு திறமைச் சித்திபெற்றிருத்தல் 04 புள்ளிகள்

(f) க. பொ. த. (சா/த) பரீட்சையில் ஆங்கில பாடத்துக்கு சாதாரண சித்தி பெற்றிருத்தல் 03 புள்ளிகள்

(g) க. பொ. த. (சா/த) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்தியெய்துதல் 02 புள்ளிகள்

(ஆகக்கூடிய ஒரு தகுதிக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்)

(4) **கணினி எழுத்தறிவு** **05 புள்ளிகள்**

(a) மூன்றாம் நிலை கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள 720 மணித்தியாலத்துக்கு குறையாத கணினி டிப்ளோமா சான்றிதழ்/ சான்றிதழ் பாடநெறி 05 புள்ளிகள்

(b) மூன்றாம் நிலை கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள 350 மணித்தியாலத்துக்கு குறையாத கணினி டிப்ளோமா சான்றிதழ் 04 புள்ளிகள்

(c) திணைக்களத்தினால் ஒழுங்குசெய்யப்படும் கணினி சான்றிதழ் பாடநெறி 03 புள்ளிகள்

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள்
மற்றும் அனர்த்த முகாமைத்துவ
இராஜாங்க அமைச்சு.

திகதி : 2020.10.05

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையில் I தரத்திலான உத்தியோகத்தர்களை மூப்புரிமை மற்றும் ஆற்றலுக்கு அமைய இலங்கை தொழில்நுட்ப சேவையில் விசேட தரத்துக்கு பதவியுயர்த்துதல் ("சிரேஷ்ட வளிமண்டலவியல் உத்தியோகத்தர்")**

1. உத்தியோகத்தரின் பெயர் :................................

2. இ. தொ. சே. தரம் I இற்கு நியமிக்கப்பட்ட திகதி :.......................................

3. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் இலங்கை தொழில்நுட்ப சேவையில் தரம் I இலான சேவைக்காலம் -

| திகதி | குறிப்பிட்ட திகதியில் சேவைக்காலம் | | |
|---|---|---|---|
| | வருடம் | மாதம் | திகதி |
| 2012.10.24 | | | |
| 2014.01.13 | | | |
| 2014.07.01 | | | |
| 2014.10.29 | | | |
| 2015.02.02 | | | |
| 2015.04.06 | | | |
| 2015.04.06 | | | |
| 2015.04.06 | | | |
| 2015.04.06 | | | |
| 2016.11.05 | | | |
| 2017.03.10 | | | |

4. தொழில் தகைமை

| தொடர் இலக்கம் | பயிற்சி | பெற்றுக்கொண்ட திகதி/ பூர்த்தி செய்த திகதி |
|---|---|---|
| 01 | உலக வளிமண்டலவியல் அமைப்பின் வகுப்பு III இற்கான சான்றிதழ் | |
| 02 | உலக வளிமண்டலவியல் அமைப்பின் வகுப்பு IV இற்கான சான்றிதழ் | |
| 03 | திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள வெளிநாட்டு பயிற்சிகள் | |
| 04 | ஏனைய வாழ்க்கைத் தொழில்சார் சான்றிதழ்கள் | |

5. திணைக்களத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள அனைத்து பயிற்சிகள் பற்றிய விபரம்-

| தொடர் இலக்கம் | பயிற்சி | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்தி செய்யப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 01 | தொடர் பயிற்சி | | |
| 02 | திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தொடர்ச்சியான பயிற்சி (CET) பாடநெறிகள் | | |
| 03 | ஏனைய பயிற்சிகள் | | |

அட்டவணை I மற்றும் II இலங்கை ஆசிரியர் கல்வியாளர்களின் சேவை தரம் III திறந்த ஆட்சேர்ப்புத் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோக பரீட்சை புள்ளித்திட்டம் என்பதாக திருத்தப்படும்.

அட்டவணை I மற்றும் II இல் *1.3, 2.2, 2.5, 2.6, 3.4, 3.5, 3.6* எனும் இலக்கங்களுக்கு முன்னால் உள்ள "*" புள்ளி அகற்றப்பட்டு திருத்தப்படும்.

இந்த வர்த்தமானியின் மற்ற அனைத்து நிபந்தனைகளும் மாறாமல் உள்ளன.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைகள் குழுவின் ஆணைப்படி,

பேராசிரியர் கே. கபில சி. கே. பெரேரா,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

*2020*, ஒற்றோபர் *13*.

*10-1066*

---

இணைப்பு *01*

திருத்தம்

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழு**

கல்வி அமைச்சு

**இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர்கள் சேவையின் III ஆம் தரத்துக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை -2019(2020)**

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் *2,162* மற்றும் *2020.02.07* ஆந் திகதிய வர்த்தமானி அறிவிப்பின் மூலம் வெளியிடப்பட்ட இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை III ஆம் தரத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை - *2019 (2020)* க்கான விண்ணப்பம் கோரும் அறிவிப்பில் கீழ்க்காணும் வாசகங்கள் இதற்கு முன்னால் காட்டப்பட்டவாறு திருத்தப்படுகின்றன."

விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதி : *2020.11.06*

*4* I (ii) இலங்கை கல்வி நிர்வாக சேவையில் அல்லது இலங்கை அதிபர்கள் சேவையில் அல்லது அரச சேவைக்கு, மாகாண பொது சேவைக்கு உரியவர்கள் இலங்கை ஆசிரியர் சேவையில் அல்லது பிரிவெனா ஆசிரியர்களாக பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட அலுவலராக இருத்தல் வேண்டும்.

*4* I (iii) இலங்கை கல்வி நிர்வாக சேவை அல்லது இலங்கை அதிபர்கள் சேவையில் அல்லது அரச சேவைக்கு, மாகாண அரச சேவைக்கு உரிய இலங்கை ஆசிரியர் சேவையில் அல்லது பிரிவெனா ஆசிரியர்களாக அண்மித்த முன் ஐந்தாண்டு காலத்திற்குள் அனைத்து சம்பள ஏற்றங்களையும் உரிய தினத்தில் ஈட்டிக்கொண்டிருப்பதோடு, அக்காலத்தில் ஒழுக்காற்று தண்டனைகளுக்கு உட்பட்டிருக்கக்கூடாது. (இந்த அண்மித்த முன் சேவைக்காலத்துக்காக மேற்குறித்த சேவைகள் இரண்டில் அல்லது சிலவற்றில் மொத்தமான சேவைக் காலம் கருதப்படும்.)

4I(vi) பிரிவெனா ஆசிரியர்களாக பணிபுரியும் அலுவலர்களுக்கு சிங்களம், பௌத்த தர்மம், வரலாறு, அழகியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப பாடங்களுக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும். (இந்த சந்தர்ப்பத்தில் மட்டுமே தகவல் தொழில்நுட்ப பாடத்துக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பு உண்டு.)

4 III அனுபவம் - விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசி திகதியான 2020.11.06 அல்லது அதற்கு முன், இந்த அறிவிப்பில், 04 I மற்றும் 04 II இல் காட்டப்பட்ட தகைமைகளோடு இலங்கை கல்வி நிர்வாகச் சேவை அல்லது இலங்கை அதிபர்கள் சேவை அல்லது அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்குரிய இலங்கை ஆசிரியர் சேவையில் அல்லது பிரிவெனா ஆசிரியராக சேவையை உறுதி செய்த 05 வருடங்களுக்கும் குறையாத முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்த அலுவலராக இருத்தல்.

5. விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளும் இறுதித் தினத்துக்கு 50 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். அதன்படி, 1970.11.06 அன்று அல்லது அதற்குப் பிறகு பிறந்த நாள் கொண்டவர்கள் மட்டுமே இதற்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள். (இந்த வயது வரம்பு இந்த சந்தர்ப்பத்தில் மட்டுமே வலுவிலிருக்கும்.)

அட்டவணை I மற்றும் II இல் 1.3, 2.2, 2.5, 2.6, 3.4, 3.5, 3.6 எனும் இலக்கங்களுக்கு முன்னால் உள்ள "*" புள்ளி அகற்றப்பட்டு திருத்தப்படும்.

இந்த வர்த்தமானியின் மற்ற அனைத்து நிபந்தனைகளும் மாறாமல் உள்ளன.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் ஆணைப்படி,

பேராசிரியர் கே. கபில சி. கே. பெரேரா,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

2020, ஒற்றோபர் 13.

10-1067

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.